# *2017 ஐப்பசிமாத சங்க குடும்ப தின நற்செய்தி*

01. ஆரம்பபுகழ்ச்சி : புபுது பாடல் இல 02. “நமோ நமோ தூய ஆவி…”

**புகழ்ச்சிக்கு உட்புகுதல் :**

திருப்பாடல் 113:1-2 **“ஆண்டவரின் ஊழியர்களே அவரைப் புகழுங்கள் ஆண்டவரது பெயர் வாழ்த்தப் பெறுவதாக இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்தப் பெறுவாராக”**

- புகழ்ச்சி செய்வதென்பது புத்துயிர் பெற்ற (மறுமலர்ச்சி பெற்ற) மக்கள் செபிக்கும் இன்னொருவிதமாகும். ஆதை “கூச்சலோடு சேர்ந்த வந்தனை” என அறிமுகப்படுத்தலாம். புகழ்ச்சி மற்றும் நமஸ்காரத்தினூடாக மகா பரிசுத்தமான மூவொரு கடவுளின் பிரசன்னத்தை நாம் அனுபவித்திருக்கின்றோம். ஆவரை அனுபவிப்பதும் அவரது வெளிப்பாடும் பற்றி எமக்கு அதிவிசாலமான அனுபவங்கள் உண்டு.
- நாம் இன்னும் புகழ்ச்சிக்கும் நமஸ்காரத்திற்கும் உள்ளாகுவோம். கடந்தகாலம் பூராகவும் விதவிதமாக அனுபவித்த இறைவனின் பிரபல்யமான செயல்களுக்காக நன்றி கூறி புகழ்வோம். புகழ்ச்சியின் மத்தியில் வெளிப்படும் உயிர்த்த கிறிஸ்துவை சந்திப்பதற்கு தாகம் கொள்வோம். உயிர்த்த இயேசுக் கிறிஸ்துவினூடாகப் பொங்கி வழியும் பரிசுத்த ஆவியின் கங்கையில் மூழ்கி ஸ்நானம் செய்து பெறும் திருமுழுக்கினால் சர்வ வல்லவராம் மகா உன்னதமானவருக்கு ‘அப்பா’ என்று அழைத்து நமஸ்காரத்தின் வந்தனையின் செபத்திற்கு உள்ளாகுவோம்.

  புபுது பாடல் இல 06 “தூய ஆவியானவரே….”

02. புகழ்ச்சி மற்றும் நமஸ்காரம் பற்றி அனுபவம் பகிர்ந்து கொள்ளவும்.
    கடந்த மாதம் நாட்டிற்காக செபித்ததையும் நடுநிலைவகித்தலையும் பற்றி அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளவும்.

03. நாளுக்கரிய நற்செய்தி
    i. அறிமுகம் :-
       கிது தன புபுதுவிற்கு அதிவிசாலமான நோக்கு உண்டு கடவுள் கிறிஸ்துவினூடாக உலகத்தையும் மனிதனையும் பற்றி வெளிப்பாடாக்கிய அபிப்ராயம் தொடர்ப்பான நோக்காகும். எனவே புபுதுவின் தனித்தன்மையை பற்றி சுவாமி அப்பா அவர்கள் பலவிதமாக எடுத்துரைத்துள்ளார்.
       1) கிது தன புபுதுவ செபத்தின் இயக்கமாகும்.
       2) கிது தன புபுதுவ இறைவார்த்தையின் இயக்கமாகும்
       3) கிது தன புபுதுவ தேவ அன்னையின் இயக்கமாகும்
       4) கிது தன புபுதுவ இல்லறத்தினரின் இயக்கமாகும்
       5) கிது தன புபுதுவ தியான–சீடத்துவ இயக்கமாகும்

இன்று நாம் எமது அவதானத்தை முதலாவது இலட்சணத்திற்கு அதாவது “கிது தன புபுதுவ செபத்தின் இயக்கமாகும்” எனும் தலைப்பிற்கு கவனத்தை செலுத்துவோம்.

ii. நாம் கத்தோலிக்கர் என்ற முறையில் எமது மேன்மையான மற்றும் மகா உன்னதமான செபமாக "திருப்பலியை" அடுத்து செபமாலை–பரிசுத்த மணித்தியாலம் மற்றும் பலவித பக்தி முயற்சிகள் எமது செபமாக இருந்தது.

- உயிர்த்த இயேசுவை சந்தித்து பரிசுத்த ஆவியின் திருமுழுக்கின் பின் நீங்களும் நானும் புத்துயிர் பெற்ற கிறிஸ்தவர்களாவோம்.
- பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு (அபிஷேகம்/ஸ்பரிசம்/பொழிதல்/ஊற்றெடுத்தல்) முன்னிட்டு புது வாழ்வின் மூல இலட்சணங்கள் 4ன் - ஊற்றுக்கள் 4ஆக எமது ஆன்மாவினூடாக ஊற்றெடுத்து–வழிந்தோடி வந்தது.

I. செபத்திற்கான தாகம்

II. புகழ்வதற்கான தாகம்

III. இறைவார்த்தைக்கான தாகம் (விவிலியம் வாசிப்பதற்கான)

IV. கிறிஸ்து அளித்தலுக்கான தாகம்

இந்த தாகத்தை தணித்துக் கொள்வதற்கு, ஆழமாக்கிக் கொள்வதற்கு அதன் பலாபலனை பெற்றுக் கொள்வதற்கு, சுவாமி அப்பாவழியாக எமக்குக் கிடைத்த படிப்பினைகள் - ஞானஒடுக்கம் - பயிற்சிகள் - மூலமாக செபத்தின் மக்கள் ஆவதற்கு செபத்தின் இயக்கமாவதற்கு வழிகிடைத்தது.

இன்று நாம் பரிசுத்த ஆவியானவர் எமக்குள் ஏற்படுத்திய முதல் நீரூற்றுக்கு விழிப்புறுவதற்கு கவனத்தைச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

iii. குழுவினுள் கலந்துரையாடுவதற்கு :-

(அ) உங்களது அர்ப்பணத்தின் முதல் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும்.

(ஆ) அதை முன்கொண்டு செபத்தின் ஊற்று மறுமலர்ச்சி அடைந்த விதத்தை பகிர்ந்து கொள்ளவும்.

(இ) அந்த தாகம் தணிந்த விதம், செபவாழ்வு கட்டியெழுப்பிய விதம், உங்களது தனிச்செபவாழ்வின் ஆரம்பகாலம், கடந்த காலம் மற்றும் இன்றைய நிலை எவ்வாறு?

(ஈ) பலவீனமாக இருந்தால் பலவீனமான நிலை ஆரம்பித்தது எப்போது? அல்லது தொடர்ந்து செயல்பட்டிருந்தால் அதற்கான இரகசியம் என்ன?

iv. செபத்தின் இயக்கமாக 47 வருடங்களாக எமக்குகிடைத்துள்ள வழிகாட்டல்களின் சுருக்கமான காரணிகள் இரண்டை வர்ணிக்கலாம்.

1. தனிச் செபம்
2. எனது மணித்தியாலம்

## 1. தனிச்செபம் என எமக்குக் கிடைத்த வழிகாட்டல் :-

- செபம் என்பது இறைஅன்புக்கு உளம் திறத்தல் ஆகும். இறைஅன்பில் நிறைவதாகும். இறைஅன்பு எம்மூடாக மற்றைய மனிதர்களுக்கு–சமுதாயத்திற்கு–வழிந்தோடுவதற்கு இடம் அளிப்பதாகும். அந்த அன்பினால் அன்பு செய்வது என்பதாகும்.
- இன்று நாம் அவதானத்தைச் செலுத்தப் போவது "எனது மணித்தியாலம்" என சுவாமி அப்பா எமக்கு அளித்த வழிகாட்டலாகும்.

- நீங்கள் செபிப்பது தனிச்செபத்தின் வழிகாட்டலுக்கு அமையவாயிருப்பின் அதைப் பிரச்சனையாக எடுக்க வேண்டும். உங்களுக்கு அப்படியே செய்துகொண்டு போகலாம்.
- நாம் இந்த வழிகாட்டல் இரண்டையும் புரிந்து கொள்வதற்கு எமக்கு பலவிதமாக செபவாழ்வினை ஆழமாக்கிக் கொள்வதற்கு உதவியாகும். ஆன்மீக வாழ்வு புத்திரத்தன்மையின் வாழ்விற்கு உறுதியான உதவியாகும்.
- எப்படி எவ்விதமாக நாம் செபித்தாலும் அது இறைஅன்பை அனுபவிப்பதாகும். கிறிஸ்து இயேசுவை சந்திப்பதாகும். பரிசுத்த ஆவியானவரினால் நிரம்புதலாகும்.

## 2. எனது மணித்தியாலம்

- தனிச் செபத்தில் எமக்குப் கற்றுக் கொடுத்தது செபம் என்றால் இறைஅன்பை அனுபவிப்பது என்றாகும். இங்கு எமக்குப் கற்றுத் தருவது செபம் என்பது பயணம் என்றாகும்.
- நாம் பயணிக்க வேண்டியது நாம் இப்போது இக்கணம் இருக்குமிடத்திலிருந்து எந்நேரமும் இருக்கவேண்டிய இடத்திற்கேயாகும் **“நாம் இருக்க வேண்டிய இடத்திற்கு சதாகாலமும் இருக்கவேண்டிய இடத்திற்கு பயணிப்பது செபமாகும்”**

1) செபம் ‘மீட்பின்’ பயணமாகும்

பிரச்சினை, துன்பங்கள் மத்தியில் கூட புதுமையான விடுதலையை அனுபவிப்பதாகும். அது வெறும் மனித விடுதலை அல்ல. பிரச்சினை, துன்பம், பீடணைமத்தியில் நான் இருக்கவேண்டிய இடத்தில் இருந்துகொண்டு பெறும் உள்ளாந்திரவிடுதலையாகும்.

2) சேபம் எமதாண்டவரின் “நோக்கு” அனுபவிக்கும் பயணமாகும். கிறிஸ்து நாதரின் மனுவுருவாதுலை தந்தையானவரின் மகாஉன்னதமான நற்செய்தி அவர் அளித்த நோக்கினுள் அடங்கி உள்ளது. கிறிஸ்து ஆண்டவரின் முழு வாழ்விலும் அவரது போதனை மற்றும் வெளிப்பாடாகிய உவமான உவமேயங்கள் உள்ளும் வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் அவரது விதம் விதமான சம்பவங்கள் உள்ளும் அவருக்கு நிகழ்ந்த பலவிதமான நிகழ்வுகளுக்கு அவர் பதில் அளித்த வித்திலும் அவர் வாழ்ந்த நாட்டில், சமுதாயத்தில் பலவிதமான பிரச்சினைகள் முன்னிலையில் அவர் அளித்த பதில்கள் ஊடாகவும் அவரது மகா “நோக்கு” வெளிப்பாடாக்கியது.

3) **செபத்தில் பயணம்**

1. தெய்வீகமயமான வாசிப்பு புனித யோவான் 14: 16 – 17
2. இரட்டை விழிப்புறுதல்
3. வேளிமுற்றம்
   (அ) பச்சத்தாபம்
   (ஆ) மனஸ்தாபம்
4. வரவேற்பு மண்டபம்
5. சாலை
6. இல்லத்திற்கு உட்புகுதல், அரவணைப்பு (தந்தையானவரின் இதயத்திற்கு உள்ளாகுதல்)

இந்த செபத்தின் பயணம் மாளிகையை அடையாளமாகக் கொண்டு மகாமண்டபத்திற்கு உள்ளாவதற்கு தொடர்ப்புபடுத்தியுள்ளது. அதன் முடிவு பிதாவானவர் இருக்கும் இடமாகும். இருப்பிடம் இருதயம் அரவணைப்பு

**தெய்வீகமயமான வாசிப்பு : புனித யோவான் 14: 16-17**

i. தெய்வீகமயமான வாசித்தலுக்கு உள்ளாகி எம்மை உறுத்திய வார்த்தைக்கு உள்ளாகி பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புறவும்.

**இரட்டை விழிப்புறுதல்**

ii. நீங்கள் இருக்கும் நிலைக்கு விழிப்புறுங்கள். அடையாளம் கண்டு கொள்ளுங்கள். உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்பாகி நீங்கள் இருக்கும் நிலையை மூடிக் கொள்வதற்கு இடமளியுங்கள்.

**வெளிமுற்றம் (1) பச்சாத்தாபம்**

iii. கடைசியாக எனது மணித்தியாலம் செய்த கணம் தொட்டு இக்கணம் வரை திரும்பிப்பார்த்து உங்களால் நிகழ்ந்த பாவங்களுக்குப் பச்சாத்தாபப் படுங்கள். (தலையான பாவங்கள் - உள்ளாந்திர காயம் - எண் - பழக்கம் அடிமைபடுதல் - இவைகளை உதவியாக்கிக் கொள்ள முடியும் )

**வெளிமுற்றம் (2) மனஸ்தாபம்**

iv. சிலுவையடிவாரத்திற்கு பயணித்து திருக்குருதியினால் கழுவிச் சுத்தமாக்கப்பட்டு மீட்பை விசுவாசத்தோடு உரிமையாக்கிக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை முண்கொண்டு நான் மீட்பு அடைந்துள்ளேன். நான் இப்போது இறைவனுடைய மகன் - மகள் அதை நான் விசுவாசத்தோடு ஏற்றுக் கொள்கிறேன்.

**வரவேற்பு மண்டபம்**

v. நாளுக்குரிய வாசகங்களை உதவியாக்கிக் கொண்டு கிறிஸ்துநாதரை உற்றுநோக்குங்கள். கிறிஸ்து நாதரின் நோக்கை உற்றுநோக்குதல்.

**சாலை**

vi. விண்ணகத்தில் உள்ள புனிதர்களை ஆழமான சங்கமத்தினுள் சந்திக்குமிடம். இவ்விடத்தில் புனிதர்களின் ஐக்கிய பிரயோசனத்தை நமக்கு அனுபவிக்கலாம். உத்தரிப்பு ஸ்தலத்தில் துன்பப்படும் ஆன்மாக்களோடு சங்கமிக்கலாம். 5 விரல் செபத்திற்கு உள்ளாகலாம். அதனூடாக (போர் புரியும் சபையோடு சங்கமாகலாம்)

**இல்லம்** (இருப்பிடம்,தரிப்பிடம்)

vii. அமைதியாக பிதாவானவரின் அரவணைப்புக்கு உள்ளாகவும்.
பரிசுத்த ஆவியானவரே எம்மை அழைத்து செல்லவேண்டிய இடமாகும். ஊண்மையாக நாம் அரவணைப்புக்கு போன பின்பு அது நமக்குத் தெரியாது. ஊணர்வுகளுக்கும் புரியாது. அது பரிசுத்த ஆவியானவரின் விசேடமான வரப்பிரசாதமாகும். கிடைத்தால் போக முடியுமான இடமாகும். நிதமும் செபப் பயணத்தில் செல்லுபவர்களுக்கு அனுபவிக்கக் கூடிய வரப்பிரசாதமான நிலையாக அறிமுகப்படுத்தலாம்.

3. எனது மணித்தியாலத்திற்கு அரைமணி நேரத்தை ஒதுக்கவும்.

4. குழு கலந்துரையாடல் :-

- இன்று பெற்ற அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும்.
- உங்களுக்குச் செபிப்பதற்கு நேரம் - காலம் இடம் உண்டா?
- உங்களுக்குச் செபிப்பதற்கு நேரம் இல்லாவிடில் இன்று தீர்மானம் எடுத்தீர்களா? பகிர்ந்து கொள்ளவும்.
- பரிசுத்த ஆவியானவரின் ஸ்நானத்திற்காக வேண்டி குழுவினுள் செபிக்கவும்.